ஞாலகுருவின் படைப்புக்கள்

# "பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவைச் செயல்படுத்தல்"

ஆடி மாதம், இந்துமத ஆண்டு 43,73,125




குவலய குருபீடம், குருதேவர்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு.

**43,73,125ஆம் ஆண்டின் ஆடி மாத வெளியீடு.**

**தலைப்பு: பதினெண்சித்தர் மடாதிபதிக் குழுவைச் செயல்படுத்தல்.**

# உள்ளுறை

1. **"தமிழகம்தான் இந்துவேதமும், இந்துமதமும் பிறந்த இடம்."** - காஞ்சிபுரத்திலிருந்து தொடர்பு கொண்ட சித்தரடியார்கள் இருவருக்கு குருதேவர் எழுதிய சுருக்க விளக்க அஞ்சல்.
2. **"அருளாணை பெற்ற குருவாணைத் திருவோலை."** - உப்பிலிபாளையத்தைச் சேர்ந்த சித்தரடியானுக்கு கிடைத்திட்ட சித்திநிலைகளை விளக்கியும், கோயில் சார்ந்த மடாதிபதிக் குழுவை அமைத்திட ஆணை தந்தும் குருதேவர் எழுதிய விரிவான அஞ்சல் இது.
3. **"மடாதிபதிக் குழு உருவாக்கும் முறை."** - சிவகாசியைச் சேர்ந்த சித்தரடியார் ஒருவருக்கு அருட்பட்டங்களை வழங்கியும், அவரது ஊரில் உள்ள கோயில்களுக்கு மடாதிபதிக் குழுக்களை உருவாக்கும் முறைகளை விளக்கியும், இந்த மடாதிபதிக் குழுக்கள் செயல்படும் விதம் மற்றும் பெறும் பயன்கள் குறித்து விளக்கியும், செயல்திட்டங்களை வழங்கி குருதேவர் எழுதிய அஞ்சல்.
4. **"பண்பாட்டுப் புரட்சி நிறுவனமே நமது நிறுவனம்"** - அருட்சேனைத் தளபதிக்கு குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சலில் இ.ம.இ., இ.மு.க. அ.வி.தி. ஆகிய நிறுவனங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் வீரர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளை விளக்கிடும் பத்தி.

***பின்குறிப்பு:-*** *இந்த கட்டுரைகளில் குறிக்கப்படும் அறிவிக்கை எண்: 7777ஐ 2018ஆம் ஆண்டு மாசி மாத வெளியீட்டில் படிக்கலாம்.*

ஓம் குருவே துணை

# தமிழகம்தான் இந்துவேதமும், இந்துமதமும் பிறந்த இடம்

9-7-92,
சென்னை - 53.

அனுப்புதல்:-
அருள்மிகு குருதேவர், ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம்,
பதினெண்சித்தர் மடம், இந்துவேத பாடசாலை,
13, குமாரசாமித் தெரு, வரதராாசபுரம், அம்பத்தூர்.

பெறுதல்:-
அருள்மிகு சித்தரடியார்கள்
M. பாலகிருட்டிணன், R. மணி,
சவுளிக்கடை சத்திரம்,
122, காந்தி ரோடு, காஞ்சிபுரம்.

இந்துமதத்தின் வளமான வருங்காலத்தில் அக்கறையும், ஆர்வமும், ஆழ்ந்த ஈடுபாடும் உடைய சித்தரடியார் M. பாலகிருட்டிணன் அவர்களுக்கும், சித்தரடியார் R. மணி அவர்களுக்கும் குவலய குருபீடம், குருமகாசன்னிதானம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களின் பதினெண்சித்தர் மடத்திலிருந்து எழுதப்படும் பதில் திருவோலை:

1) தங்களுடைய 4.7.92ஆம் நாளிட்ட அஞ்சலுறை அஞ்சல் குருதேவருக்குப் படித்துக் காட்டடப்பட்டது. தாங்கள் மனமகிழ்ந்து

குருதேவரின் திருப்பணிகளுக்கு நன்றி தெரிவித்தமைக்குக் குருதேவர் வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்துக் கொள்கிறார். உங்கள் இருவருக்கும் அருளூறு பூசனைப் பொருள்கள் அனுப்பப்படுகிறது. கயிறை வலது கை மணிக்கட்டில் கட்டிக் கொள்ளவும்.

2) இத்துடன் பதினெண்சித்தர் மடத்துப் படிவ எண் - 9 அனுப்பப் படுகிறது. இதைப் போல் படிவங்களைத் தாங்கள் கையெழுத்தில் எழுதியோ அல்லது தட்டெழுத்தில் பொறித்தோ (Typewriting) தயாரித்து தங்கள் இருவருடைய விவரங்களையும், தங்கள் மூலம் பதினெண்சித்தர் மடத்தோடு தொடர்பு கொள்ள விரும்புகிறவர்களின் விவரங்களையும் அவ்வப்போது எழுதியனுப்புங்கள்.

குறிப்பு:- அதாவது நீங்கள் இருவரும் பதினெண்சித்தர் மடத்தின் பணிகளில் பங்கு கொள்வதோடு உங்களின் மூலம் பலரையும் பதினெண்சித்தர் மடத்துப் பணிகளில் பங்கு பெறச் செய்யுங்கள்.

3) நமது குருபீடம் வாழ்நாள் முழுவதும் இமயம் முதல் குமரி வரை உள்ள இந்துக்களை விழிச்சி பெறச் செய்யவும், எழுச்சி பெறச் செய்யவும், இந்துவேதத்தில் பயிற்சி பெறச் செய்யவும், இந்துமத வாழ்வியல்களில் முயற்சி பெறச் செய்யவும் அயர்ச்சி இன்றி பாடுபட்டு வருகிறார். ஆனால், எதிர்பார்த்த பயன் இன்னும் விளையவில்லை.

4) நமது தமிழகம்தான் இந்துவேதமும், இந்துமதமும் பிறந்த இடம். நமது தமிழகத்தில்தான் இந்துவேதமும், இந்துமதமும் கூறுகின்ற 192 வகைப்பட்ட கடவுளர்கள் வாழும் இடங்களும் (கருவறைகள், வெட்டவெளிக் கருவறைகள், வழிபாட்டு நிலையக் கருவறைகள், கோயில் மூலக் கருவறைகள்) இருக்கின்றன. தமிழகத்துக்குள்தான் சிவபெருமான்கள் 64 முறை (ஒரே சிவபெருமான் 64 முறை வந்ததாகவும் கூறுவார்கள்; 64 சிவபெருமான்கள் வந்ததாகவும்

கூறுவார்கள்.) நேரில் வந்ததாக வரலாறு இருக்கிறது. தமிழகத்தில்தான் 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள், தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரியார், சங்கராச்சாரியார், இராமானுஞ்சாச்சாரியார், இராகவேந்திரர், ... முதலிய பலரும் தோன்றியிருக்கிருர்கள் ??? ... !!! ஆனுல், ஆனுல், ஆனுல்,

I. தமிழகத்தில்தான் பாழடைந்த கோயில்கள் அதிகம் இருக்கின்றன.
II. தமிழகத்தில்தான் நாத்திகர்கள், கடவுள் வெறுப்பாளர்கள், எதிர்ப்பாளர்கள், மறுப்பாளர்கள் நிறைய இருக்கிருர்கள்.
III. தமிழகத்தில்தான் பல்வேறு மொழிகளுக்குரிய அன்னிய மந்திரவாதிகள், குறிகாரர்கள், சோதிடர்கள், ... மிகுதியாக இருக்கிருர்கள்.
IV. தமிழகத்தில்தான் அன்னிய மதங்கள் வளத்தோடும், பொலிவோடும் வாழுகின்றன.

இவை பற்றிச் சிந்தித்து ஆவன செய்யப் பதினெண்சித்தர் மடத்தின் சன்னிதானங்கள், ஆதினங்கள், தம்பிரான்களேச் சந்தியுங்கள். வாய்ப்பு வசதி இருந்தால் குருபீடத்தையும் சந்திக்க வாருங்கள்.

5) தமிழர்கள்தான் அண்டபேரண்ட அருளுலகம் அனேத்துக்குமே தத்துவ வித்துக்களாக, வேத வித்துக்களாக, சித்தாந்த சொத்துக்களாக, அருளுலக மூலவர்களாக, அருளுலக நாயகர்களாக, அருளுலகக் காவலர்களாக, ... அனுதி காலத்திலிருந்து தொடர்ந்து இருந்து வருகிருர்கள். ஆனுல், தமிழர்கள்தான் இந்தக் கலியன் உகத்தில் (கலியுகத்தில்) கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மிகப்பெரிய அளவில் அடிக்கடி வீழ்த்தப்பட்டும், தாழ்த்தப்பட்டும், ஆழ்த்தப்பட்டும், சிதைத்துச் சீரழிக்கப்பட்டும், அடிமையாக்கப்பட்டும், மிடிமையில் ஆட்பட்டும், ... அவலக் கேவல நிலேகளே அடைந்து வருகின்றனர். இது மட்டுமின்றி கல்வி, கலே, தொழில், சமுதாயம், சமயம், மதம், அரசியல், ... முதலிய அனேத்துத் துறைகளிலும் தமிழர்கள் தன்மானம்,

தன்னம்பிக்கை இழந்து, ஒற்றுமை அழிந்து, உரிமை உணர்வைக் கொன்று ஏஞேதாஞே என்று சொந்த நாட்டிலேயே அஞதைகளாக, பிச்சைக்காரர்களாக, எடுபிடிகளாக, அன்னியர்களிடம் கங்காணிகளாக, கூலிகளாக, வேலிகளாக வாழ நேரிட்டிருக்கின்றது. **அதாவது, அருளுலகப் பாரம்பரியமும், உரிமையும், பெருமையும் உடைய தமிழர்கள் இப்படியெல்லாம் மதிப்பிழந்து அன்னியர்களால் மிதிக்கப்பட்டு, வதைக்கப்படுவதற்குக் காரணம் இவர்கள் தங்களுடைய சாத்தரங்களேயும், சாத்திரங்களேயும், சாத்திறங்களேயும், சரித்திறங்களேயும், இலக்கியங்களேயும், வேதங்களேயும், மதநூல்களேயும், ... போற்றிப் பேணிப் பாதுகாத்து மதித்துக் கற்று, நோற்று, உரிய பயன்களே உற்று வாழும் வாழ்வு பெற்றிடாததுதான்.** எனவே, தங்களேப் போன்று அரசுத் துறைகளிலோ, தனியார் அலுவலகங்களிலோ மாட்டிக் கொள்ளாமல் பெருமித உரிமை வாழ்வு உடையவர்கள் நமது மொழி, இனம், மதம், பண்பாடு, நாகரிகம் காக்கவும்; நம் மக்களேக் காக்கவும் தேவையான ஆக்கப் பணிகளே ஊக்கமோடு செய்ய முன்வர வேண்டும், முன்வர வேண்டும், முன்வர வேண்டும். விரிவஞ்சி இத்துடன் நிறுத்தப்படுகிறது. மற்றவை தங்களின் பதில் கண்டு.

**பதினெண்சித்தர் மடம்,**

**சென்னே - 53.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: கையெழுத்துப் பிறதியாக இருந்தது. யாருடைய கையெழுத்து என்று தெரியவில்லே.//**

# <u>அருளாணை பெற்ற குருவாணைத் திருவோலை</u>

*[... அஞ்சல் வடிவக் கட்டுரையின் ஆரம்பம் இல்லை; ....இடையில் வரும் வாசகங்களை வைத்து இந்த அஞ்சல் <u>அருள்மிகு உப்பிலிபாளையம் பத்திரகாளியம்மன் சன்னிதானம் திரு கு. சம்பத்</u> என்பவருக்கு **<u>21-07-1992</u>**இல் எழுதப்பட்ட அஞ்சல் என்று அறியப்படுகின்றது.]*

... ... ... முற்பட்டேயாக வேண்டும் நமது நிர்வாகக் குழு. எனவே, நீதான் துணிச்சலாகச் செயல்பட வேண்டும். இனியும் புலி போன்றவர்களுக்கிடையே எலி போன்றவர்களின் செயல் எடுபடக் கூடாது. புரிந்து செயல்படுக.

(8) அன்பு மகனே, உன்னுடைய உள்ளுணர்வுகள் எப்பொழுதோ சித்தியாகி விட்டன. நீ அருட்கணிப்பு கூறலாம், அருள்வாக்கு கூறலாம். உனக்கு இதுமுதல் **<u>‘அருட்கணிப்பு செல்வன்’</u>** என்ற அருட்பட்டம் வழங்கப்பட்டு சித்தி தரப்படுகிறது. உன் கனவுகள் சித்தியாகி விட்டன. உன்னுடைய நனவுகளை வடிவப்படுத்திக் கொண்டால் அதுவே ஞானக்காட்சி, அருட்கணிப்பு.

(9) அன்பு மகனே, நீ உப்பிலிபாளையம் கோயிலுக்கு மடாதிபதியாக நியமிக்கப்படுகிறாய். அறிவிக்கை எண் 7777இன் படி நீ உடனே பதினேழு பேர்களுக்கு அருட்பட்டங்களைக் கொடுத்து உன்னுடைய **‘மடாதிபதி குழுவை’** வலிமைப்படுத்திக் கொள். அதாவது, உனக்குத் துணையாக உப்பிலிபாளையம் பத்திரகாளி பீடாதிபதி, உப்பிலிபாளையம் பத்திரகாளியம்மன் சன்னிதானம், ... உப்பிலிபாளையம் பத்திரகாளியம்மன்

வாமகோடி பீடம் என்று உங்களோடு சேர்த்து 18 பேர்கள் சேர்ந்து **<u>‘உப்பிலிபாளையம் பத்திரகாளியம்மன் மடாதிபதி குழுவை</u>** உருவாக்குங்கள். இதுபோல், உங்கள் ஊரில் உள்ள ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு மடாதிபதி குழுவை உருவாக்குங்கள். இதைப் போலவே கோவை மாவட்டம் முழுவதும் உள்ள ஒவ்வொரு சிறுசிறு கிராமத்திலும், சிறிய ஊரிலும், பெரிய ஊரிலும், நகரங்களிலும் உள்ள ஒவ்வொரு கோயிலிலும் ஒரு மடாதிபதி குழுவை உருவாக்குங்கள்.

<u>குறிப்பு:-</u>

i) இந்த மடாதிபதி குழுவைச் சேர்ந்த ஒவ்வொரு அருட்பட்டத்தவர்க்கும் உடனேயே சித்திச் சக்கரம் வழங்கப்படும்.

ii) அருட்பட்டத்தவர் தனது பெயர், வயது, முகவரி, தொழில், தன் குடும்பத்தில் உள்ளவர்களின் பெயர், வயது எழுதியனுப்பினால் போதும். பதினெண்சித்தர் மடத்து குருபீடத்திற்கு ரூ.11.25 காணிக்கை செலுத்தினால் போதும். உரிய சக்கரம் பெற்று மார்பு, முதுகு, இரு தோள்பட்டை, உச்சந்தலை ஆகிய ஐந்து இடங்களிலும் சக்கரத்தை மாற்றி மாற்றி வைத்து அன்றாட பூசைமொழிகள் நான்கையும் கூறினால் தேவையான சித்திகள் கிடைக்கும். அருட்பட்டம் சித்தியாகும்.

(10) இப்படி ஒவ்வோர் ஊரிலும், கிராமத்திலும் ஒரே ஒரு மடாதிபதி குழு உருவாக்கப்பட்டு விட்டால் கூடப் போதும்; மிக விரைவில் வட்டாரம், வட்டம், மாவட்டம் என்ற அளவில் மடாதிபதி குழுக்களைக் கூட்டி **‘கருத்துப் பரிமாற்ற சிந்தனை அரங்கம்’** (க.ப.சி.அ.) நிகழ்த்தப்பட்டிட்டால் போதும். மிக விரைவில் இ.ம.இ.யும், இ.மு.க.வும் நல்ல வளர்ச்சியையும், வலிமையையும் பெற்று அருளாட்சி அமைத்திடலாம்.

(11) சன்னிதானப் பட்டம் பெற்றவர்கள், அ.வி.தி. பணியாற்றுகிறவர்கள், யாகம் செய்கிறவர்கள், அருட்கணிப்பு கூறுகின்றவர்கள் இடுப்பில் 4 முழ குருதிவண்ண சிவப்பு வேட்டி; அதற்கு மேல் இடுப்பில் 6 முழம் அல்லது 8 முழம் நீளமுள்ள சிவப்புத் துணியை இடுப்பு கச்சையாகக் கட்டி இருக்க வேண்டும். அத்துடன் 12 முழம் நீளமுள்ள குருதி வண்ண சிவப்புத் துணியை தலைப்பாகையாக கட்டியிருக்க வேண்டும். இதுதான் குருபாரம்பரிய சட்டம். இதுதான் பதினெண்சித்தர்கள் வகுத்துள்ள அ.வி.தி. செயல்வீரருக்குரிய சன்னிதான உடை.

(12) எனவே, **“மேற்படி சட்டதிட்டக் கட்டுப்பாடுகளை மறந்தோ, துறந்தோ, மறுத்தோ, வெறுத்தோ, மறைத்தோ, குறைத்தோ, புறக்கணித்தோ, ஒதுக்கியோ செயல்படுபவர்கள் பதினெண்சித்தர்களின் இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும், திருமடத்திற்கும், குருபீடத்திற்கும் துரோகிகள், விரோதிகள், மக்களை ஏமாற்றிக் கெடுதல் செய்யும் மந்திரவாதிகள், பாவத்தையும் சாபத்தையும் சம்பாதித்துக் கொள்ளும் கயவர்கள்”** என்று குருபாரம்பரியம் திட்டவட்டமாகக் கூறுகிறது. எனவே, யாராக இருந்தாலும் பதினெண்சித்தர்களின் சட்டதிட்டக் கட்டுப்பாட்டின்படி சன்னிதான உடை அணியாமல் செயல்பட்டால் அவர்களை உடனே கண்டித்து விடுங்கள். அவர்களை நமது அமைப்புக்களை விட்டு தூக்கி எறிந்து விடுங்கள். அவர்கள் நமக்குத் தேவையே இல்லை. **இப்படி துணிச்சலாகச் செயல்பட வேண்டியது நீங்கள்தான்**. புரிந்து செயல்பட முன்வாருங்கள். **அப்போதுதான் உங்களின் பின்னால் உலகமே வரும்**.

**குறிப்பு:-** நிர்வாகக் குழு செயலாளராகிய உங்களுக்கு முழு அதிகாரமும், உரிமையும் வழங்கப்படுகிறது. எனவே, எல்லோரும் கட்டாயம் சன்னிதான உடை அணிந்துதான் செயல்பட வேண்டும் என்ற விதியை, சட்டத்தை அமுலாக்குங்கள், செயலாக்குங்கள்.

(13) "சன்னிதானப் பட்டம் பெற்ற ஒவ்வொருவரும் கட்டாயமாக வாரம் ஒருமுறை ஓலை எழுதி (இக்காலத்தில் 15 பைசாவுக்கு உரிய அஞ்சலட்டை) குருதேவரின் திருக்கைகளால், அருட்கைகளால் தொடப்பட்டு; தொட்டு வாழ்த்தப் பெற்று அருட்சத்தியைப் பெற்றேயாக வேண்டும்" - என்ற குருபாரம்பரிய விதியை, குருபாரம்பரிய வாசகத்தை எல்லோரும் கட்டாயம் செயலாக்கும்படிச் செய்யுங்கள்.

(14) தனிமனிதரோ அல்லது அருட்கோட்டமோ யாருக்கு மந்திரித்து அருள்வழங்கினாலும் சரி, வாராவாரம் மந்திரித்துக் கொண்டவர்களுடைய பெயர்ப் பட்டியல் முழுமையான முகவரியுடன் அந்தப் பாதிப்பாளரின் பாதிப்புப் பற்றிய சிறு குறிப்புடன் பதினெண்சித்தர் மடத்தின் அலுவலகத்திற்கு, அம்பத்தூருக்கு வாராவாரம் அனுப்பியேயாக வேண்டும். அப்பொழுதுதான் "குருதேவரின் நேரடிக் கண்காணிப்பால் வாராவாரம் வெள்ளிக்கிழமை மாலையில் குருதேவரின் இல்லத்தில் நடக்கும் ஐந்தீ வேட்டல் யாகப் பெருஞ்சுடர் பூசையிலும், ஞாயிற்றுக் கிழமைகளில் காரணையில் உள்ள பதினெண்சித்தர் மடத்தின் **கருகுலத்தில் குருவாணைப்படி** நடக்கும் ஐந்தீ வேட்டல் பெருநெருப்புப் பூசையிலும் பாதிக்கப்பட்டவர்களின் பாதிப்புக்கள் அனைத்தும் நீங்கி மந்திரிக்க வந்தவர்களுக்கு முழுமையான நலம் விளைவிக்கப்படும்" என்ற குருபாரம்பரிய வாசகத்தைச் செயலாக்குங்கள்.

(15) "தனிமனிதர்களானாலும் சரி, அருட்கோட்டங்களானாலும் சரி, பதினெண்சித்தர் மடத்து குருபீடத்திலிருந்துதான் (13, குமாரசாமி முதலி தெரு, வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 53) அருளூறு பூசைமொழி புத்தகங்கள், அறிக்கைகள், ... முதலியவற்றைப் பெற்று பொதுமக்களுக்கு வழங்க வேண்டும்" - என்ற குருபாரம்பரிய சட்டத்தை, விதியை, குருவாசகக் கருத்தை அப்படியே செயலாக்குங்கள்.

(16) "குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒருமுறையாவது அருட்கணிப்பு கணிப்பவர்கள், அருள்வாக்கு கூறுகிறவர்கள், ஞானக்காட்சி

காண்பவர்கள், மந்திரித்து அருள்வழங்குபவர்கள், யாகம் செய்பவர்கள், சத்தி பூசை, சித்தி பூசை, முத்தி பூசை, தவம், ... முதலியவற்றைச் செய்பவர்கள் பதினெண்சித்தர் மடத்து குருபீடம், குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியாரால் நேரில் இட்டும், தொட்டும், சுட்டியும் அருளைப் பெற வேண்டும்; அருள் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், காலப்போக்கில் பல்வேறு வகையான பாதிப்புக்களுக்கு உள்ளாவார்கள்...” என்ற குருபாரம்பரிய சட்டத்தை, விதியை, குருபாரம்பரிய வாசகக் கருத்தை உரியவர்கள் புரிந்து செயலாக்கிப் பயனடையும்படிச் செய்யுங்கள்.

(17) நிர்வாகக் குழுவின் செயலாளராகிய தாங்கள் துணிந்து எடுக்கும் முடிவுகள் நிர்வாகக் குழுவால் செயலாக்கப்பட வேண்டும். இதற்கு எந்த நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஒத்து வராவிட்டாலும், உடனே நிர்வாகக் குழுவைக் கூட்டி முடிவெடுத்து பதினெண்சித்தர் மடத்தின் அலுவலகத்திற்கு (அம்பத்தூர்) தெரிவித்து தலைவர், குருதேவரின் ஆணை பெற்று உடனேயே தற்காலிக பதவி நீக்கம் செய்து விடுங்கள். அடுத்து முழுமையாக விசாரணை நடத்தி தேவையானால் முழுமையாக அவர்களை நிலையாக விலக்கிட குருபீடத்திற்குப் பரிந்துரை செய்து, அருளுலக ஒப்புதல் பெற்று, உரிய அருளாணை வழங்கப்படும். அந்த அருளாணையைச் செயலாக்குங்கள். அதுதான் உங்கள் கடமை. இதுதான் நிர்வாகக் குழுவின் செயலாளரின் கடமை.

(18) இன்று 21-7-92 செவ்வாய்க்கிழமை இந்துமத ஆண்டு 43,73,093 ஆக்குரோச ஆண்டு ஆடி மாதம் 6ஆம் நாள் விடுக்கப்படும் இந்த **“அருளாணை பெற்ற குருவாணைத் திருவோலை”** கண்டவுடன் குறைந்தது ஒரு வார காலத்திற்குள் கீழ்க்கண்ட தகவல்களை தலைமைப்பீடத்திற்குத் தெரிவியுங்கள்.

I. நிர்வாகக் குழுவைச் சேர்ந்த 12 பேர்களுடைய a) பெயர், b) வயது, c) தொழில், d) முழுமையான முகவரி, e) குடும்பத்தில் உள்ளவர்கள் பெயர், வயது, f) அருட்பட்டங்கள், g) எவ்வளவு காலமாக உறுப்பினராக இருக்கிறார்கள்?

II. இ.ம.இ., இ.மு.க. கிளைகள் எங்கெங்கு இருக்கின்றன, கோவை மாவட்டத்திற்குள்?

III. இ.ம.இ., இ.மு.க. உறுப்பினர் அட்டை எண், உறுப்பினர் அட்டை வரிசை எண், முகவரி ஊர் வாரியாகத் தயாரித்து அனுப்புங்கள்.

IV. தாங்கள் பதவி வகிக்கும் நிர்வாகக் குழு போல் **கோவை மாவட்டம் முழுவதும் உருவாக்கப்படக் கூடிய ஒவ்வோர் அருட்கோட்டத்திற்கும் ஒரு நிர்வாகக் குழு உண்டு.** இதுதான் அருளாட்சி நாயகமாகிய தஞ்சைத் தாத்தாவின் **அருளாட்சி அமைப்புப் பணி செயல்திட்டம்**. எனவே, ஒவ்வொரு நிர்வாகக் குழுவும் அந்தந்த அருட்கோட்டம் அமைக்கப்பட்டுள்ள ஊரின் பெயரால்தான் அழைக்கப்படும். ஆனால், வரிசையாக கோவை மாவட்டம் முழுவதும் ஒவ்வொரு ஊருக்கும் அருட்கோட்டத்தின் அடிப்படையில் நிர்வாகக் குழு அமைக்கப்படும்.

V. இப்படி கோவை மாவட்டம் முழுவதும் ஊர் ஊராக நிர்வாகக் குழுவை அருட்கோட்டத்தின் அடிப்படையில் அமைப்பதற்காகத்தான் முதன்முதல் சிறுமுகையில் கோவை மாவட்டச் செயலுக்காக **முதல் நிர்வாகக் குழு** அமைக்கப்பட்டது. எனவேதான், *“சிறுமுகை நிர்வாகக் குழு, கோவை மாவட்டத்தில் ஊர் ஊராக நிர்வாகக் குழுக்களை அமைக்கும் பொறுப்பையும், உரிமையையும், பெருமையையும் பெற்றது.”*

(19) சிறுமுகையில் உள்ள நிர்வாகக் குழுவின் மூலம் கோவை மாவட்டத்தில் உள்ள எல்லா வட்டங்களிலும் (Taluk) நிர்வாகக்

குழு அமைக்கப்பட்ட பிறகுதான் தேர்தல் மூலம் கோவை மாவட்ட நிர்வாகக் குழு உருவாகும். எனவே, இன்றைய நிலையில் சிறுமுகை நிர்வாகக் குழு கோவை மாவட்டம் முழுவதும் நிர்வாகக் குழுக்களை அமைக்கும் பொறுப்பினைப் பெற்று திகழுகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் எல்லோரும்.

(20) சிறுமுகை நிர்வாகக் குழுவினரில் சிலர் தங்கள் விருப்பம் போல் தலைவர், குருதேவர், இந்துமதத் தந்தை, குவலய குருபீடம் பற்றிக் கருத்துக்கள் கூறி வருகிறார்கள். இதை நிர்வாகக் குழு கண்டித்ததா?

I. நாராயணசாமி நாயுடு வீட்டில், அதுவும் அருட்கோட்டம் உள்ள வீட்டில் குருதேவரைக் கேட்காமல் குருதேவரின் ஒப்புதல் பெறாமல் குழாய்க் கிணறு தோண்ட எப்படிப் பூசை செய்யலாம்? பூசை செய்த குற்றவாளி யார்? அதைக் கண்டித்தீர்களா? ஆனால், குழாய்க் கிணறு வெற்றி பெறவில்லை என்பதற்கு மட்டும் குருதேவர் அருள் புரியவில்லை என்று குருதேவரின் சாபம் காரணமாக இருக்குமோ என்று பலவாறு பேசுபவர்களை நிர்வாகக் குழு கண்டித்ததா?

II. சிறுமுகைக்குள் நடக்கும் யாகங்களில் மட்டுமின்றி, எங்கு எந்த அருட்கோட்டத்தில் யாகம் நடந்தாலும், யாகம் நடக்கின்ற அன்றைக்கு மட்டும்தான் படையல் பொருள்கள் படைக்கப்பட வேண்டும். இந்தச் சட்டம் சிறுமுகையில் மீறப்படுகிறது என்பது நிர்வாகக் குழுவுக்குத் தெரியுமா?

III. யார் யாகம் செய்தாலும்; அருள்வாக்கு, அருட்கணிப்பு கூறினாலும்; முழுமையாக சன்னிதான உடை அணிந்து உரிய முறையில் திருநீறு, குங்குமம் பூசி, உருத்திராக்கங்களை அணிந்து முழுமையாக சன்னிதானமாகவே இருந்து தாத்தாக்களையும், ஆத்தாக்களையும், அம்மையப்பன்களையும், அருளாட்சி நாயகமான தஞ்சைத்

தாத்தாவையும், அருளாட்சி நாயகத்தின் அருளாணை பெற்று அருட்போரையும், அருளாட்சி அமைப்புப் பணியையும் முன்னின்று தலைமை தாங்கி நிகழ்த்தும் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களையும், அவரவர்க்கு வழங்கப்பட்டுள்ள அருட்பட்டங்களுக்கு உரியவர்களையும் நினைத்து வாழ்த்தி வணங்கிப் பூசை செய்துதான் அ.வி.தி. பணியை ஆற்ற வேண்டும். இதன்படிச் செயல்படாமல் அவரவர் விருப்பப்படி ஆடை அணிந்தும், படுத்துக் கொண்டும் வசதி போல் அ.வி.தி. பணியாற்றுகிறவர்களை நிர்வாகக் குழு கண்டித்ததா? திருத்த முற்பட்டதா?

(21) நிர்வாகக் குழு செயல்திட்டத்திற்காக என்று நோட்டு புத்தகம் போடப்பட்டிருக்கிறதா? அதில் வாராவாரம் நிர்வாகக் குழு கூடியது பற்றிய குறிப்பு இருக்கிறதா?

I. நிர்வாகக் குழுவில் உள்ள 12 பேர்களுடைய முழு முகவரிகளும், குடும்ப விவகாரங்களும், நிர்வாகக் குழு புத்தகத்தில் பதியப் பட்டிருக்கின்றனவா?

II. நிர்வாகக் குழுவில் புதிதாகச் சேர்ந்துள்ளவர்களின் பெயர், வயது, முகவரி முதலிய விவரங்களை உடனுக்குடன் பதியப்பட்டு தேதி அடிப்படையில் தெளிவாக இருக்கின்றனவா?

III. இதுவரை நிர்வாகக் குழு கூடி அவ்வப்போது விவாதித்த செய்திகள் பற்றியும், எடுத்த முடிவுகள் பற்றியும், உருவாக்கிய செயல்திட்டங்கள் பற்றியும், சாதித்த சாதனைகள் பற்றியும் நிர்வாகக் குழு நோட்டுப் புத்தகத்தில் குறிப்புக்கள் இருக்கின்றனவா?

IV. மேற்குறித்த நிர்வாகக் குழு விவரங்கள் அனைத்தையும் தலைமைப்பீடத்திற்கு எழுதி அனுப்ப வேண்டியது செயலாளராகிய தங்கள் கடமை.

(22) அதிகமான பாதிப்புக்கள் அம்பிகாபதியின் அருட்கோட்ட யாகசாலைக்கு ஏற்பட்டு விட்டன. அதற்குச் சக்கரங்களை மாற்ற வேண்டும் என்று எழுதி நெடுங்காலம் ஆகியும், அந்தப் பாதிப்புள்ள அருட்கோட்ட யாகசாலையையே தொடர்ந்து பயன்படுத்தி அம்பிகாபதியும், நிர்வாகக் குழுவும் மக்களுக்கு மந்திரித்து அருட்பணியாற்றினுல் *எப்படி மக்களுக்கு நன்மை கிடைக்கும்? நன்மை கிடைக்காவிட்டாலும் பாதகமில்லை, நாராயணசாமி நாயுடுக்கு ஏற்பட்டது போல் தோல்விகளும், தொல்லைகளும், துன்பங்களும் பலருக்கும் ஏற்பட்டுக் கொண்டுதானே இருக்கின்றன. இந்தத் தவறுக்கும், குற்றத்துக்கும் உரிய பாவம் நிர்வாகக் குழுவிற்குத்தானே உரியது?*

(23) எனவே, உடனடியாக நிர்வாகக் குழுவின் செயலாளர் என்ற முறையில் அம்பிகாபதியின் வீட்டில் நடைபெறும் யாகத்தையும், பூசைகளையும் உடனடியாக முழுமையாக நிறுத்தி விடுங்கள். அதற்குப் பதிலாக நமது நிர்வாகக் குழு தலைவர் அருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானம் சித்தரடியார் இரா. இராமசாமி அவர்களுடைய வீட்டு யாகசாலையையே பயன்படுத்துங்கள். இது **அருளாணை பெற்ற குருவாணையாகும்**.

(24) நமது சித்தரடியார் அம்பிகாபதி அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தார்களுக்கும் கடுமையான பாதிப்புக்கள் இருப்பது பற்றி காரைக்குடியில் உள்ள அருள்மிகு அகத்தியர் சன்னிதானம் மு. இராமானுசதாசு அவர்கள் நேரிலேயே அருட்கணிப்பு கூறியும்; தலைமைப்பீடத்திலிருந்து குருதேவர் அம்பிகாபதியின் பாதிப்புக்கள் பற்றி அவரிடமே நேரிலும், அஞ்சல் வடிவிலும் பலமுறை எடுத்துக் கூறியும்; ஆண்டுகள் சில கழிந்தும் இன்று வரை அவர் பரிகாரம்

செய்து கொள்ளவில்லை. இப்படி மிகுந்த பாதிப்புக்களுக்கு உரிய இந்த அம்பிகாபதி ஈடுபட்டிட்ட பூசைகள், அருட்கணிப்புக்கள், பரிகார பூசைகள், வழங்கியுள்ள முடிகயிறு, தாயத்து, சக்கரங்கள் முதலிய அனைத்துமே தோல்வியாகி விட்டன என்பதோடு; பிறருக்குத் தொல்லையையும், துன்பத்தையும், வருத்தத்தையுமே தொடர்ந்து வழங்கி வருகின்றன. மேலும், இவருக்கும் உடல்நலப் பாதிப்பு, இவருடைய மனைவி, மகள், மகன் முதலியவர்களுக்கும் பாதிப்புக்கள் அதிகமாகிக் கொண்டே போய்விட்டன. எனவே, திடீரென்று இவருடைய குடும்பத்திற்கு பாதிப்புக்கள் வரலாம், மிகப்பெரிய பாதிப்புக்கள் வரலாம். அப்பொழுது இவரும் நிர்வாகக் குழுவும் குருதேவரையோ, குருபீடத்தையோ குறை கூறக் கூடாது. இது எச்சரிக்கை. எனவே, உடனடியாக இவருடைய வீட்டு யாகசாலை நிறுத்தப்பட வேண்டும். இதை இவரே புரிந்து இந்த அஞ்சல் கண்டது முதல் a) சன்னிதான உடை அணிவது, b) உருத்திராக்க மாலை அணிவது, c) மெய்ஞ்ஞானக்கொடி பிடிப்பது, d) திரிசூலம் பிடிப்பது, e) மயில்பீலி வைத்திருப்பது, f) பிறருக்கு மந்திரிப்பது, g) அருள்வாக்கு அருட்கணிப்பு ஞானக்காட்சி கூறுவது, h) செவ்வாடை அணிவது, i) அ.வி.தி. பணிகளில் ஈடுபடுவது, ... முதலிய அனைத்து வேலைகளையும் விட்டுவிட வேண்டும், விட்டுவிட வேண்டும், விட்டுவிட வேண்டும்.

(25) இந்த அஞ்சல் கண்டது முதல் நமது அம்பிகாபதி அவர்கள் சாதாரண உடை அணிந்து வாராவாரம் நமது நிர்வாகக் குழு தலைவர், இராமசாமி அவர்கள் யாகசாலையில் வந்து குடும்பத்துடன் மந்திரித்துக் கொள்ள வேண்டும். அடுத்து இவரிடம் பொருளாதார வசதி அதிகமில்லை என்பதால் இவர் தமது குடும்பத்தாரின் உடல்நிலை, மனநிலை, கனவுநிலை முதலியவைகள் பற்றி தொடர்ந்து எழுதி தேவையான முடிகயிறு, தாயத்துக்களை தலைவர் இராமசாமி மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

<u>**குறிப்பு:-**</u>

இவருக்குப் பாதிப்புக்கள் அதிகமாக இருப்பதாலும், இவருக்குரிய பரிகாரம் செய்து கொள்ளாமல் இருந்தாலும், இவருக்காக சிக்கனமாக <u>இவரை தலைமைப்பீடத்திற்கு வரவழைக்காமல் கூடுமானவரை இனுமாகவே</u>, இலவசமாகவே பதினெண்சித்தர் அருட்கொடையாக ... <u>இவரைக் காப்பாற்ற எல்லா பரிகாரப் பூசைகள் செய்வதாலும்</u>, இவருக்கு திருநீறு குங்குமம் கூட நேரடியாக அனுப்ப முடியாது, அனுப்பக் கூடாது. இதுதான் உண்மை நிலை. எனவே, நமது நிர்வாகக் குழு தலைவர் அருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானமும், அவருடைய வீட்டு யாகசாலையும்தான் அம்பிகாபதியைக் காப்பாற்ற முடியும், காப்பாற்றப் பயன்படும். இதைப் புரிந்து செயல்படுங்கள். இதன்படி இவரைச் செயல்படும்படி செய்ய வேண்டியது நிர்வாகக் குழுவின் பொறுப்பு; நிர்வாகக் குழுவின் செயலாளராகிய உங்களின் பொறுப்பு.

<u>**சிறப்புக் குறிப்பு:-**</u>

கடுமையான பாதிப்பை உடைய இவர் ஓரளவாவது நலம் பெறும்வரை நிர்வாகக் குழு அமைப்பாளர் பணியிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுகிறார். அதாவது, குறைந்தது ஆறுமாத காலத்திற்கு கட்டாயமாக இவர் நிர்வாகக் குழு கூட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாது. இதை மீறி **இவர் கலந்து கொண்டால் மற்றவர்கள் பாதிப்புக்கு உள்ளாவார்கள். எச்சரிக்கை.**

(26) மிகுந்த பாதிப்புக்குரிய அம்பிகாபதி அவர்கள் தலைவர் இராமசாமி வீட்டு யாகத்திற்கு ஒரு பாதிப்பாளராக, நோயாளியாக குடும்பத்துடன் வந்து மந்திரித்துக் கொண்டு வீடு திரும்பி விட வேண்டும். தலைவர் இராமசாமி வீட்டில் தங்குவதோ, மற்றவர்கள் வீட்டுக்குச் செல்லுவதோ, அம்பிகாபதி மூலம் பிறருக்குப் பாதிப்பைத் தந்துவிடும். அதாவது, **அம்பிகாபதியோ அல்லது அவரது**

**குடும்பத்தாரோ குருதேவரை பார்க்க வருவதோ, அல்லது குருதேவருக்கு அஞ்சல் எழுதுவதோ கூடாது. தடுக்கப்படுகிறது.**

<u>குறிப்பு:-</u>

நிர்வாகக் குழுவின் செயலர் என்ற முறையில் அருள்மிகு உப்பிலிபாளையம் பத்திரகாளியம்மன் சன்னிதானம் கு. சம்பத் ஆகிய தாங்கள் மட்டும்தான் அவருக்காக அஞ்சல்கள் எழுதலாம். மற்ற யாரும் எழுதத் தேவையில்லை. எனவே, அம்பிகாபதி இந்த சட்டதிட்டக் கட்டுப்பாடுகளின்படி நடக்காவிட்டால் நமது நிர்வாகக் குழுவினர்களும், உறுப்பினர்களும், இயக்கத்தவர்களும், கழகத்தவர்களும், பொதுமக்களும் மிகுந்த அளவில் பாதிக்கப்படுவர். எச்சரிக்கை.

(27) **அருட்போரின் ஆயத்தப் பணிகள் ஆரம்பமாகி விட்டன. திருச்செந்தூர் முருகன் போர்க்கோலம் பூண்டு விட்டான். அண்டபேரண்டங்களில் இருந்து அருட்போருக்காக வந்துள்ள ஆத்தாள் தேவி உக அற நாயகியும், கருகுலத்தில் உள்ள பதினெட்டம்மன் பீடங்களிலும் எழுந்தருளியிருக்கும் பதினெட்டுக் காளிகளும், வட்ட வெட்டவெளிக் கருவறைகளில் எழுந்தருளியிருக்கும் குருமாரியம்மனும், கருகுலத்தில் அருட்போருக்காக எழுந்தருளியிருக்கும் அனைத்து வகைப்பட்ட அருவங்கள், அருவுருவங்கள், உருவ அருவங்கள், உருவங்கள், கருக்கல்கள், குருக்கல்கள், தருக்கல்கள், திருக்கல்கள், ... முதலியவர்களும் அருளாட்சி நாயகத்தின் அருளாணைப்படி முறையாகவும், நிறைவாகவும் போர்க்கோலம் பூண்டு போர்க்கள நாயகங்களாக, போர்க்களத் தளபதிகளாக, போர்ப்படைத் தலைவர்களாக, ... செயல்படத் துவங்கி விட்டார்கள்! செயல்படத் துவங்கி விட்டார்கள்!! செயல்படத் துவங்கி விட்டார்கள்!!!** எனவே, நமது நிர்வாகக் குழு உறுப்பினர்களும், நமது மன்ற, நமது இயக்க, கழக, ... உறுப்பினர் ஒவ்வொருவரும் தனித்தனியாக அவரவரின்

பழம்பிறப்பிற்கும், மறுபிறப்பிற்கும் ஏற்ப இப்பிறப்பில் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை குருதேவரோடு தொடர்பு கொண்டு தெரிந்து கொண்டேயாக வேண்டும். இதுதான் கடமை. மேலும், ஒவ்வொருவரும் தங்களுக்கு குருதேவரிடமிருந்து கிடைக்கக் கூடிய செய்திகளையும், செயல்திட்டங்களையும் இரகசியமாகக் காப்பாற்றி அவரவர் ஆற்றலுக்கேற்ப செயல்பட வேண்டும். அனாவசியமாக அடுத்தவருடன் கலந்து பேசி நேரத்தையும், முயற்சியையும் வீணாக்கக் கூடாது. ஆர்வமிருப்பின், அக்கறையும் திறமையும் இருப்பின், இரகசியம் காப்பாற்றிச் செயல்படும் பண்பு இருப்பின் குருதேவர் மூலம் அனைத்து வகையான அருளுலக, பொருளுலக பாதுகாப்புக்களும், பயன்களும் கிடைக்கும். புரிந்து செயல்படுக.

(28) போர்க்கால, போர்க்கோல செயல்திட்டமாக நீங்கள் உங்களுடைய சொந்தக்காரர்களும், உறவினர்களும், உற்றார்களும், நண்பர்களும், தோழர்களும் வாழுகின்ற ஊர்களுக்கெல்லாம் சென்று:-

I. இந்துமதத்தில் பத்தியிலும், சித்தியிலும் ஆர்வமும், அக்கறையும், மதவழியாக மக்களுக்கு தொண்டு செய்வதில் விருப்பமும் உடையவர்கள் கிடைத்தால் அவர்களைக் கொண்டு நமது அறிவிக்கை எண் 7777இன் படி பதினெண்சித்தர் மடாதிபதிக் குழு அமைக்க வேண்டும். அதாவது, இந்துமதத்தில் அதிக ஆர்வமுள்ளவர்கள் தங்களுடைய குலதெய்வம், விருப்ப தெய்வம் முதலியவைகளின் பெயரால் மடாதிபதிக் குழுவை அமைக்க வேண்டும். அதாவது, குறிப்பிட்ட ஊரின் பெயர், மற்றும் கோயிலின் பெயர் எழுதி அக்கோயிலின் தெய்வத்தின் பெயரை எழுதி மடாதிபதி, பீடாதிபதி, ... வாமகோடிப் பீடம் என்று அறிக்கையில் (எண்: 7777) உள்ளபடி 18 அருட்பட்டங்களை உடைய பதினெட்டுப் பேர்களை உண்டாக்கி விட வேண்டும். இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பூசை செய்தால் மிக

விரைவில் அவரவர்க்கு உரிய வண்ணம் சத்தி, சித்தி, முத்திகள் கிடைக்கும். இதன்படி நாடு முழுவதும் குக்கிராமம், சிற்றூர், பேரூர், சிறிய நகரம், மாநகரம் என்று ஒவ்வோர் இடத்திலும் உள்ள ஒவ்வொரு கோயிலிலும் ஒரே ஒரு மடாதிபதிக் குழுவாவது அமையும்படிச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நாம் மடாதிபதிகள் மாநாடு, பீடாதிபதிகள் மாநாடு என்று தனித்துக் கூட்டி அருளாளர்களுக்கிடையே நமது கொள்கைகளேயும், செயல்திட்டங்களேயும், புதிய புதிய நிறுவன நிருவாகக் கட்டமைப்புக்களோடு வளர்ந்திட முடியும்.

II. அதாவது, நமது அமைப்புக்களே சேர்ந்தவர்களோ அல்லது ஆதரவாளர்களோ அவர்களுடைய விருப்பத்திற்குரிய ஊரில் உள்ள கோயிலின் பெயர், கடவுளின் பெயர் எழுதி தங்களுடைய பெயர், வயது, தொழில், முகவரி முதலியவற்றை குறித்து எழுதி தங்களுக்கும் மடாதிபதி பட்டம் வேண்டும் என்ருல் கொடுக்கப்படும். அதை அடுத்து அவர்கள் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் இருந்து அல்லது சொந்தக்காரர்களிடமிருந்தோ அல்லது ஊர்க்காரர்களிடமிருந்தோ வசதிப்படி நான்கைந்து பேர்களாக அல்லது மொத்தமாக 18 பேர்களாக ஒவ்வொருவரின் பெயர், வயது, தொழில், முகவரி, குடும்பத்தில் உள்ளவர்களின் பெயர், ... முதலிய விவரங்களே படிவ எண் (Form No.9) 9இன் படி முழுமையாகக் குறித்து பதினெண்சித்தர் மடத்திற்கு அனுப்பினுல்; உடன் அவர்களுக்கு மீதமுள்ள 17 அருட்பட்டங்களும் தரப்படும். ஆகையால் இந்த 18 பேர்களும் சேர்ந்து ஒரு மடாதிபதிக் குழுவை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இந்த மடாதிபதிக் குழுவினர்கள் வாரத்தில் ஒரு நாளாவது ஒன்று சேர்ந்து; அக்குறிப்பிட்ட கோயிலில் ஒன்று சேர்ந்து ஒருமுறை கூட்டு வழிபாடு நிகழ்த்தினுல் மிகப்பெரிய அளவில் பத்தி, சத்தி, சித்தி, முத்திகளேப் பெறலாம்.

III. இந்த பதினெட்டு அருட்பட்டங்களுக்குரிய ஒவ்வொருவரும் குருபீட காணிக்கையாக ரூ.11.25ஐ அஞ்சல் தலைகளாகவோ (Postal Stamps) அல்லது பணமாகவோ பதினெண்சித்தர் மடத்திற்கு அனுப்பி வைத்தால் உடனே **"மடாதிபதிக் குழு சக்கரம்"** அனுப்பப்படும். அதை அவரவர் உச்சந்தலை, மார்பு, முதுகு, இரண்டு தோள்பட்டை ஆகிய ஐந்து இடங்களில் வைத்து அன்றாடப் பூசைமொழிப் புத்தகத்தில் உள்ள நான்கு மந்திரங்களை 4 அல்லது 8 முறை ஓதினால் போதும். காலப்போக்கில் அவர்களுக்குரிய சித்திகள் கிடைத்து விடும். இப்படி சித்தி பெற்றவர்கள் அதிகமானால்தான் இந்துமதம் உயர்ச்சி பெறும், வளர்ச்சி பெறும், எழுச்சி பெறும், ஆட்சி பெறும் .... எனவே, தங்களைப் போன்றவர்கள் ஒத்துழைப்பு தாருங்கள்.

(29) அதாவது, தாங்கள் பெருமுயற்சிகள் செய்து கோவை மாவட்டம் முழுவதும் இந்த மடாதிபதிக் குழுக்கள், சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றங்கள், சித்தர் கருவூரார் அருட்கோட்டங்கள், சித்தர் கருவூரார் அ.வி.தி. மையங்கள் ... முதலியவைகளைத் தோற்றுவித்து; நமது இந்துமதத்தில் தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும் அருளுலகப் பொருளுலக இருளகற்றி இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் செயலாக்க வேண்டும்.

(30) தாங்கள் தங்களால் முடிந்தவரை எல்லா ஊர்களிலும் இ.ம.இ. உறுப்பினர்கள், இ.மு.க. உறுப்பினர்கள் முதலியவற்றை உண்டாக்க வேண்டும். அதாவது, மதத்துறையில் ஆர்வம் உள்ளவர்களை எல்லாம் இ.ம.இ. மூலம் நிறுவன நிருவாகக் கட்டமைப்புக்குள் கொண்டு வர வேண்டும். இ.ம.இ. கிளை அலுவலகங்களைத் தோற்றுவிக்க வேண்டும். ஊர்ப் பொதுவில் உள்ள கோயில் வளாகங்களில் இ.ம.இ.யைச் சேர்ந்தவர்கள் வாரம் ஒருமுறை ஒன்று கூடி விவாதங்கள், பட்டிமன்றங்கள், சொற்பொழிவுகள், நமது அச்சிட்ட புத்தகங்களையும்,

அறிவிக்கைகளேயும் படித்தல், யாகசாலே அமைத்து திரிசூலம் நட்டு மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றி சித்தர் கருவூரர் அருட்கோட்டங்களே ஆங்காங்கு தோற்றுவிக்கும் பணிகள் பற்றி விவாதித்தல், ... முதலியவைகளேச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதின் மூலம், இ.ம.இ. வளரும். இதற்காக **"இந்துவேத தேவ விளக்கக் கூட்டங்கள்", "63 நாயன்மார்கள் பற்றிப் பேசுதல்", "தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரியார், இராமலிங்க அடிகளார் முதலிய அருளாளர்களேப் பற்றிப் பேசுதல்", ... "பன்னிரண்டு ஆழ்வார்களேப் பற்றிப் பேசுதல்", "சமயக் குரவர் நால்வர் பற்றிப் பேசுதல்", "சந்தானக் குரவர்கள் மெய்கண்ட சிவாச்சாரியார், அருள்நந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்த சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் பற்றிப் பேசுதல்", "திருமுலர், திருவள்ளுவர் ... முதலிய தவசிகள், முனிவர்கள் பற்றிப் பேசுதல்"** ... முதலிய செயல்திட்டங்கள்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை வளர்த்திடும்.

(31) இந்து முன்னேற்றக் கழகம் வளர்த்திட பதினெண்மேல் கணக்கு நூல்கள், பதினெண்கீழ் கணக்கு நூல்கள், பதினெண் மையக் கணக்கு நூல்கள், ஐம்பெரும் காப்பியங்கள், கம்பராமாயணம், மகாபாரதம், நளவெண்பா ... முதலிய தமிழ் இலக்கியங்களேப் பற்றி மாநாடுகள், பட்டிமன்றங்கள், சொற்பொழிவுகள், ... நிகழ்த்துதல்; சமுதாய சீர்திருத்தக் கருத்தரங்குகள், அரசியல் சீர்திருத்தக் கருத்தரங்குகள், உலக சமுதாய அறிஞர்கள், அரசியல் அறிஞர்கள் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்துதல்; இந்து வேத நூல்கள் இந்து மத நூல்கள் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்துதல்; இந்து வேத வாழ்க்கை, இந்து மத வாழ்க்கை பற்றிய விளக்கவுரைகள் நிகழ்த்துதல்; இந்துக்கள் ஒன்றுபட்டு சமுதாயப் பிறச்சினேகளேயும், அரசியல் பிறச்சினேகளேயும் ஆராய்ந்து தீர்வு காணும் புதிய புதிய நிறுவன நிருவாக அமைப்புக்களே உருவாக்குதல்; ... முதலியவற்றின் மூலம் இந்து முன்னேற்றக் கழகத்தை

வளர்க்க வேண்டும். அப்படி இ.மு.க. வளர்ந்தால்தான் தெருக்கள் தோறும், ஊர்கள் தோறும் இ.மு.க.வின் கிளை அலுவலகங்கள் தோன்றுவதும், ஆங்காங்கே தனிமனிதர்களுடைய இல்லங்களிலும், பொது இடங்களிலும் சமுதாய அரசியல் கட்சிகளின் கொடிகளைப் போல் நமது இ.மு.கழகத்தின் மெய்ஞ்ஞானக் கொடி பறக்க விடப்பட்டிடும். இதற்காக கல்லூரிகள், பள்ளிக் கூடங்கள், இலக்கிய மன்றங்கள், பசனைக் கூடங்கள், வாரவழிபாட்டு மன்றங்கள், ... முதலிய இடங்களிலும் நமது இ.மு.க. பேச்சாளர்கள் நமது கொள்கைகளையும், குறிக்கோள்களையும் முழக்கிடுவதற்குரிய வாய்ப்பு வசதிகளை உண்டாக்கிடல் வேண்டும்.

<u>**குறிப்பு:-**</u>

அதாவது நமது இ.மு.க.வை படிப்பறிவில்லாத பாமரர்களின் பசனைக் கூட்டமாகவோ, குறிகாரர்கள், சோதிடர்கள், மந்திரவாதிகள், ... முதலியவர்களின் கூட்டமாகவோ, பூசைகளை மட்டுமே வளர்க்கின்ற பூசாறிக் கூட்டமாகவோ; தயாரித்து விடக் கூடாது! தயாரித்து விடக் கூடாது!! தயாரித்து விடக் கூடாது!!! அதாவது, நாம் படித்தவர்கள் கூட்டமாக எதையும் கொள்கை அடிப்படையிலும், குறிக்கோள் அடிப்படையிலும், மிகத் தெளிவான செயல்திட்டங்களின் துணையிலும் விளக்கி உரைக்கும் பகுத்தறிவாளர் கூட்டமாக, சமுதாய சீர்திருத்தவாதிகளின் குழுக்களாக, அரசியல் சித்தாந்திகளின் கழகமாக வளரவேண்டும்! வளரவேண்டும்!! வளரவேண்டும்!!! வளர்த்தேயாக வேண்டும்! அப்பொழுதுதான் நாளை நமதே! வெற்றி நமதே! என்று வீர நடை போட முடியும்.

(32) அன்பு நண்ப! செயல்வீர!! செயலாள!!! தாங்கள் குறைந்தது கோவை மாவட்டம் முழுவதும் உள்ள எல்லா ஊர்களுக்கும் சென்று ஆரம்ப நிகழ்ச்சியாக ஆங்காங்கே நமது மெய்ஞ்ஞானக் கொடியை ஏற்ற முயற்சி செய்யுங்கள். நமது அறிக்கைகளையும்,

அறிவிக்கைகளையும், அச்சிட்ட புத்தகங்களையும் வழங்க முற்பட வேண்டும். பொது மக்களுக்கு முடிகயிறு, தாயத்து, உருத்திராக்கம், சக்கரம், ... முதலியவைகளை வழங்க முற்பட வேண்டும். யாராயினும் ஒரே ஒரு பத்தர் கிடைத்தாலும் கூட உடனே திரிசூலம் நட்டு யாகசாலை அமைத்து அவரையே வாரம் ஒருமுறை யாகம் வளர்த்து பூசை செய்து மக்களுக்கு மந்திரித்து மக்களுக்கு அருள் வழங்கும்படி கூற வேண்டும். இதற்குத் துணையாக அந்தந்த வட்டாரத்துக் கோயில் பூசாறிகளைத் தயாரிக்க வேண்டும். இதை விடுத்து வாராவாரம் சிறுமுகையில் இருந்து ஆட்கள் சென்றுதான் அ.வி.தி. பணி செய்ய வேண்டும் என்று நினைக்கக் கூடாது. அதாவது மாற்று மதத்தவர்களைப் போல் நாம் நமது மதப் போதனைகளையும்; சாதனைகளையும் பரப்ப வேண்டும்.

**குறிப்பு**:- அன்பு நண்பர், தோழர் சிறுமுகை நிர்வாகக் குழு செயலர் கு. சம்பத் அருள்மிகு உப்பிலிபாளையம் பத்திரகாளியம்மன் சன்னிதானம் அவர்களே! தாங்கள் சிரமத்தைப் பார்க்காமல் ஒவ்வொரு நிர்வாகக் குழு உறுப்பினராகவும்; சன்னிதானமாகவும், இ.ம.இ. இ.மு.க. உறுப்பினராகவும் அவர்கள் வீட்டிற்கு சென்றோ அல்லது ஏதேனும் ஒரு பொது இடத்திற்கு ஒவ்வொருவராக வரவழைத்தோ இந்த அஞ்சலை பொறுமையாகவும், நிதானமாகவும் படித்துக் காட்டி; அவரவரின் கருத்துக்களைத் தெரிந்து குறித்து வைத்து அவரவர் முகவரியோடு எழுதியனுப்புங்கள்.

இது அருளாணை பெற்ற குருவாணை. எக்காரணம் பற்றியும் இதை மீறுவதோ, மாறுவதோ கூடாது! கூடாது!! கூடாது!!! கூடவே கூடாது!!! எச்சரிக்கை! **அருட்போரின் ஆயத்தப் பணிகள்** ஆரம்பமாகி விட்டதால் தாங்கள் இச்செயல்திட்டத்தை கட்டாயமாக கடைப்பிடித்தேயாக வேண்டும். ஏனெனில் தாத்தாவே குருபாரம்பரியத்தில், **"தவத்திற்கு ஒருவர் தமிழுக்கு இருவர்** என்ற மூதுரையின்படி குருவின் வழியாக

<u>வாழுகின்ற அடியான்கள், அடியார்கள், அடியாள்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகத்தான் குருவிடம் அருளுரை பெற வேண்டும் அல்லது குருவின் அருளுரையை யார் மூலமாவது படிக்கவோ கூறவோ செய்யும்பொழுது தனித்திருந்துதான் கேட்க வேண்டும்" என்று ஆணித்தரமாக, அழுத்தந் திருத்தமாக கூறப்படுகிறது. இதே விதத்தில் தமிழன் இலக்கியக் கருத்துக்களை கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் குறைந்தது இரண்டு பேர்களாவது அவசியம் இருந்து ஒருவரோடு ஒருவர் கலந்து பேசி விவாதித்துத்தான் தமிழைப் படிக்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழ்மொழியின் ஒலிநயம் புரிந்து எழுத்துப் பிழையின்றி எழுத முடியும். அதோடு எழுத்துக்களைப் புரிந்து சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் பொருளாழம் தெரிந்து தமிழில் புலமை பெற முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது.</u>

இதன்படிதான் தாங்கள் தனித்திருந்து ஒவ்வொரு தனிமனிதருக்கும் இவ்வஞ்சலைப் படித்துக் காட்ட வேண்டும். அப்படியில்லாமல் தாங்கள் ஒரு தனிமனிதருக்குப் படித்துக் காட்டிக் கொண்டிருக்கும் பொழுது இரண்டாவது தனிமனிதர் வருவாரேயானால்; உடனேயே, மிகவும் கண்டிப்புடன் அந்த இரண்டாவது மனிதரை வெளியே போகச் சொல்லிவிட வேண்டும். இதுதான் அருளுலகத்தவர்களின் கட்டளை! கட்டளை!! கட்டளை!!! அப்பொழுதுதான் நீங்கள் தவத்தை செய்தவராவீர். இந்த தவத்தைக் கெடுக்க விசுவாமித்திரர் தவத்தைக் கெடுக்க மேனகை வந்தது போல் உங்களுடைய தவத்தைக் கெடுக்க யாரேனும் வந்து விடுவார்கள். எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!!

எனவே, இந்த அஞ்சலை நீங்கள் படித்துக் காட்ட உங்களிடம் இருந்து தனிமனிதராக கேட்டிடுபவர்கள் இந்த அஞ்சலோடு உள்ள வெள்ளைத்தாளில் அவர்கள் கைப்பட தங்களுடைய பெயரையும்; வீட்டு முகவரியையும், தாங்கள் இவ்வஞ்சலை எந்த ஊரில், எந்த இடத்தில், என்ன தேதியில், என்ன கிழமையில், எந்த மணி முதல்

எந்த மணி முடிய நிர்வாகக் குழு செயலாளராகிய கு. சம்பத் படித்திடத் தாங்கள் கேட்டோம் என்பதைத் தாங்கள் குறித்திட வேண்டும்.

எக்காரணத்தை முன்னிட்டும் இவ்வஞ்சலை யாரிடமும் கொடுக்கக் கூடாது. அதாவது, உங்களை நம்பி '<u>இம்மாபெரும் இரகசியப் பொறுப்பு</u>' உங்களிடம் மட்டுமே ஒப்படைக்கப்படுகிறது. குறிப்பிட்ட காலம் கழித்து இதே அஞ்சலை நகலெடுத்து மேற்கு மண்டலத்தார் அனைவருக்கும் தருவோம். கவலை வேண்டாம். அதுவரை இரகசியத்தை காப்பாற்றுங்கள். ஏனென்றால், பெரும்பாலும் நம்மவர்களுக்கு இடையிலும், நம்மவர்களைச் சுற்றிலும் கணிசமான அளவினர் கருங்காலிகளாக, கைக்கூலிகளாக, துரோகிகளாக, விரோதிகளாக, காட்டிக் கொடுக்கும் பேராசை வெறியர்களாக, அகம்பாவ ஆணவப் போக்கு மிக்க தன்னல வெறியர்களாக; நமது ஒற்றுமையை குலைக்க வேண்டும் என்ற வம்பு, வீம்பு போக்குடைய முட்டாள் முரடர்களாக இருக்கிறார்கள்! இருக்கிறார்கள்! இருக்கிறார்கள்! எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!!

தங்கள் ஒருவரால்தான் தவறானவர்களைத் திருத்த முடியும். தவறானவர்கள் திருந்தா விட்டால் அவர்கள் போர்க்கால, போர்க்கோலச் சட்டவிதிகளின்படி கண்டிக்கப்படலாம் அல்லது தண்டிக்கப்படலாம். அதைச் செய்யப் போகிறவர் அருளாட்சி நாயகமான ஞானவேந்தர், பிற்காலச் சோழப் பேரரசை உருவாக்கிய சிற்பி, அண்டபேரண்ட அருட்பேரரசர், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய தாத்தா பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் ஆவார்! ஆவார்!! ஆவார்!!! எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!! [குறிப்பு: படித்துக் காட்டுபவரிடம்

கையெழுத்து வாங்க வெள்ளைத் தாள் வேண்டுமெனில் இதனுடன் சேர்த்துக் கொள்க.]

இந்த அருளாணை பெற்ற குருவாணையை அருளாட்சி நாயகத்தின் மகள் வயிற்றுப்பேரன், அருளாணை வழங்கு குருவாணை ஓலைநாயகம், குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், குருமகா சன்னிதானம், சித்தர் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் திருவாய் மலர்ந்தருள தொடர்ந்து எழுதியவர்கள்:

1) அருள்மிகு வீரப்பூர் தங்காயி அம்மன் சன்னிதானம் சித்தரடியான் இராசிபுரக் கடந்தப்பட்டி இரா. அண்ணாமலை B.Sc.,

2) அருள்மிகு மாங்காடு காமாட்சியம்மன் சன்னிதானம், பன்னாரியம்மன் சன்னிதானம், மேற்கு மண்டல தண்டல் நாயகம் சித்தரடியான், சித்தர் மகன், கொடுமுடி மகுடேசுவரர் சன்னிதானம், இர. பிரபாகரன் B.Sc., M.A.,

21/7/92இல் ஆரம்பிக்கப்பட்டு 25/7/92இல் நிறைவு பெற்றது.

**ஒப்பம்.**
**தலைவர், குருதேவர்,**
**ஞாலகுரு, அந்தணர் அண்ணல்,**
**ஞானாச்சாரியார்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: கையெழுத்துப் பிறதியாக கிடைத்தது. யாருடைய கையெழுத்து என்பது தெரியவில்லை.//**

ஓம் குருவே துணை

# மடாதிபதிக் குழு உருவாக்கும் முறை

சென்னை - 53,
31-7-1992.

அனுப்புதல்:-

தலைவர், குருதேவர்,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
அம்பத்தூர், சென்னை - 53.

பெறுதல்:-

த.மாணிக்கம்,
66, பேரண்டம்மாள் தெரு, சிவகாசி - 626123.

1. அருள்மிகு திருவருட்செல்வர் சித்தரடியார் த. மாணிக்கம் அவர்களுக்குக் குவலய குருபீடம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் பாராட்டும் வாழ்த்தும் வழங்கி அருட்பட்டங்கள் அருளி உள்ளார் என்பதைத் திருமடத்தின் அலுவலகத்திலிருந்து தெரிவித்துக் கொள்கிறோம்.

2. இதுமுதல் தாங்கள்

1) சிவகாசிப் பெரியவாள்,
2) காமகோடிப் பீடம்,
3) பரமாச்சாரியார்,
4) அருள்மிகு காசி விசாலாட்சி அம்மன் சன்னிதானம்,
5) சிவகாசி வட்டார அ.வி.தி. நிர்வாகக் குழுத் தலைவர், சித்தரடியார் த. மாணிக்கம்,

என்று அருட்பட்டமும், பதவியும் வழங்கி உள்ளார். இதற்குத் துணையாக,

6) ஆனந்த உத்தண்ட மாடசாமி ஆதீனம்,

7) இருக்கன்குடி மாரியம்மன் பண்டார சந்நதி,

8) அருள்மிகு திருச்செந்தூர் முருகன் கட்டளைத் தம்பிரான்,

9) அருள்மிகு நெல்லை காந்திமதியம்மன் நெல்லையப்பர் அருளாடு நாயகம் என்ற அருட்பட்டங்களும் சேர்த்து வழங்கப்படுகின்றன.

3. இதுமுதல் தாங்கள் இத்துடன் அனுப்பப்பட்டுள்ள அறிவிக்கை எண் 7777இன் படி சிவகாசி ஈசுவரன் கோயில் மடாதிபதி என்ற அருட்பட்டத்தையும், பொறுப்பையும் பெறுகிறீர்கள். எனவே, உங்களின் கீழ் பீடாதிபதி, சன்னிதானம், ... வாமகோடிப் பீடம் எனும் 17 அருட்பட்டத்தவர்களையும் உருவாக்கிடுங்கள். இதுபோல், உங்கள் வட்டாரத்தில் உள்ள எல்லாக் கோயில்களுக்கும் சிறியவை, பெரியவை என்ற வேறுபாடு அல்லாமல் ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு மடாதிபதிக் குழுவையாவது உருவாக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு கோயிலுக்கும் வருகின்ற பத்தியாளர்கள் கூட்டத்தைச் சந்தித்து அதில் 18 பேர்களையாவது தேர்ந்தெடுத்து அறிவிக்கை எண் 7777-இல் உள்ளபடி 18 அருட்பட்டத்தவர்களையும் உண்டாக்கிடல் வேண்டும்.

**குறிப்பு:-** ஒரு கோயிலுக்கு எத்தனை மடாதிபதி குழு வேண்டுமானாலும் இருக்கலாம். அதாவது ஒரு மடாதிபதிக் குழுவைச் சேர்ந்த 18 பேர்களும் ஒன்று சேர்ந்து கூட்டு வழிபாடு செய்யும்போது அந்தப் 18 பேர்களுடைய கவலைகள், குறைகள், சிக்கல்கள், வருத்தங்கள், ஏமாற்றங்கள், எரிச்சல்கள், நோய்நொடிகள், பிணிகள், வறுமைகள், ... முதலிய அனைத்துமே விரைவில் மறைந்து விடும். இவற்றிற்கு மேல் இந்தப் 18 பேர்களில் அருள்யோகம் உடையவர்களுக்கு உடனடியாகச் சத்தி, சித்தி, முத்திகள் கிடைத்திடும். அருள் யோகம் இல்லாதவர்களுக்கும் படிப்படியாகச் சிறுகச் சிறுக அருளுலக அநுபவங்கள் ஏற்பட்டுக் காலப்போக்கில் சத்தி, சித்தி,

முத்திகள் கிடைக்கும். எனவே, இந்த மடாதிபதிக் குழுவினர்கள் மந்திரித்து அருளை மருந்தாகவும், விருந்தாகவும் மக்களுக்கு வழங்கும் திருவருட் செல்வராக மாறிடுவார்கள், மாறிடுவார்கள், மாறிடுவார்கள்.

இதன்படிச் செயல்படுக.

4. தாங்கள் சேர்க்கின்ற இ.மு.க. உறுப்பினர்களில் குறிப்பிட்ட ஊரைச் சேர்ந்தவர்கள் அல்லது தெருவைச் சேர்ந்தவர்கள் அல்லது கோயிலைச் சேர்ந்தவர்கள் அல்லது கோயிலை விரும்பிச் சென்று வழிபடுகின்றவர்கள் என்று உள்ளவர்களையெல்லாம் 18 பேர் கொண்ட மடாதிபதிக் குழுவாகப் பிரித்து விடுங்கள். அதன்மூலம் இவர்கள் குறிப்பிட்ட கோயில்களில் சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றம் உருவாக்கி கூட்டு வழிபாட்டையும், இந்துமத கருத்துப் பரிமாற்ற நிகழ்ச்சிகளையும் நிகழ்த்திடக் கூடிய அரிய பெரிய சூழ்நிலை உருவாகிடும்.

5. மேற்படி மடாதிபதிக் குழுவினர் மூலமே அந்தந்தக் கோயிலை ஒட்டியோ அல்லது அந்தந்த ஊரில் உள்ள ஒரு பொது இடத்திலோ, அல்லது இந்த மடாதிபதிக் குழுவைச் சேர்ந்த 18 பேர்களில் யாரேனும் ஒருவருக்குச் சொந்தமான இடத்திலோ சித்தர் கருவூரர் அருட்கோட்டம் உருவாக்கி யாகசாலை வைத்து திரிசூலம் நட்டு மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றி வாரம் ஒருமுறையாவது யாகம் செய்து மக்களுக்கு இந்துமதத்தின் பயனை உணருகின்ற வாய்ப்பினை உருவாக்கலாம்.

6. மேற்படி மடாதிபதிக் குழுவின் மூலம் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை அந்தந்த கோயில் வளாகத்திலோ ஊரின் எல்லைக்குள்ளோ அல்லது ஊரைச் சுற்றிய சுற்று வட்டாரத்திலோ, சித்தர் கருவூரர் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையத்தை உண்டாக்கலாம். இந்த மையத்தின் மூலம்:

(அ) இந்துமத வரலாறு,

(ஆ) இந்துமத வாழ்க்கை விளக்கம்,

(இ) இந்துமத அருளாளர்கள் வரலாறு,

(ஈ) இந்துமத அருளாளர்களின் சாதனைகள், போதனைகள்,

(உ) இந்துவேதம்,

(ஊ) இந்துவேத வழிகாட்டல்கள்,

(எ) இந்துக் கோயில்கள்,

(ஏ) இந்துமத சாத்திர, சாத்திற, சாத்தரங்கள், இந்துமதச் சடங்குகள், விழாக்கள்,

... முதலிய பல தலைப்புக்களில் கருத்துக்களை மக்களிடையே திருத்தமாக வளர்க்கலாம். அதன்மூலம், 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' பல புதிய உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும், ஏந்தாளர்களையும், உதவியாளர்களையும்,... பெற்று வளர்ந்திட முடியும். இப்படியாகத் தாங்கள் மிகச் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று குருபீடம் எதிர்பார்க்கின்றது.

7. இனிமேல் தாங்கள் உறுப்பினர் அட்டைகளை இங்கு அனுப்ப வேண்டாம். ஏற்கனவே அவைகள் தலைமைப்பீடத்திலும், கருகுலத்திலும் செய்யப்பட்ட பூசைகளால் வாழ்த்தி அருளேற்றப் பட்டவைதான். எனவே, தாங்கள் இந்த அட்டையை வழங்குகின்ற ஒவ்வொருவரிடமும் 30 காசுக்கு பதிலஞ்சல் அட்டை (Reply Card) வாங்கி அதில் தங்களுடைய முகவரியை ஓர் அஞ்சலட்டையில் எழுதியும், மற்றோர் அஞ்சலட்டையில் அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 53 என்ற முகவரி எழுதியும், தங்களுடைய இ.மு.க. முகவர் எண், பெயர், வயது, தொழில் முகவரி முதலியவைகளையும் எழுதி அனுப்பினால் அது தலைமைப்பீடக் கோப்பில் பாதுகாக்கப்படும். அவர்கள் அனுப்பும் பதில் அஞ்சலட்டை குருபீடத்தில் வாழ்த்தப் பெற்று அருளூறு பூசனைப் பொருளாக அவர்களுக்கு அனுப்பப்படும். இது மட்டுமின்றி இவர்கள் வாழ்நாள் முழுவதும் எப்பொழுது தங்களுக்குப் பாதிப்பு வந்தாலும் உடனேயே தங்களுடைய உறுப்பினர்

அட்டை வரிசை எண்ணைக் குறித்து தங்களுடைய பாதிப்புக்குப் பரிகாரம் செய்யும்படி வேண்டுகோள் விடுத்தால் உடனேயே இங்கு நடக்கும் யாகங்களிலும், பூசையிலும் பாதுகாப்புகள் வழங்கப்படும்.

**<u>குறிப்பு:-</u>** எனவே, ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதரும், உறுப்பினர் காணிக்கை ரூபாய் 2/- செலுத்தி இ.மு.க. உறுப்பினர் அட்டை பெற்று அவரவருடைய பெயர், வயது, முகவரி முதலியவைகளைத் தெரிவித்தால்தான் அவரவருக்குப் பயன் உண்டு என்ற பேருண்மையை அனைவருக்கும் விளக்கிச் செயல்படுங்கள்.

தாங்கள் குருதி வண்ணச் சிவப்பு ஆடையில் இருந்து கொண்டுதான் செயல்பட வேண்டும். நமது சன்னிதானங்களைச் சந்தித்து சிவப்பு வண்ண 4 முழ வேட்டியை முழங்கால் தெரியும் வண்ணம் எப்படி மடித்துக் கட்டுவது, இடுப்பில் வேட்டி அகலம் உள்ள 8 முழத் துணியை எப்படி நாலாக மடித்துக் கட்டுவது, தலையில் 12 முழ நீளமுள்ள வேட்டி அகலமுள்ள துணியை எப்படி தலைப்பாகையாகக் கட்டுவது என்பதை எல்லாம் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் மந்திரிப்பதற்காக மெய்ஞ்ஞானக் கொடியும், மயில் பீலியும் தலைமைப்பீடத்திலிருந்து கிடைக்கும். நீங்களோ அல்லது உங்களுக்கு வேண்டியவர்களோ வந்தாலும் கொடுத்தனுப்பப் படும்.

**<u>குறிப்பு:-</u>** தாங்கள் தங்களுடைய செலவில் சுமார் 5½ அடி உயரமுள்ள அடிப்பகுதியும், ½ அடி உயரமுள்ள திரிசூல மேல் பகுதியும் உடைய 6 அடி உயரமுள்ள திரிசூலத்தை செம்புக் குழாயிலோ (Copper Pipe) பித்தளைக் குழாயிலோ, இரும்புக் குழாயிலோ செய்து கொள்ள வேண்டும். அந்தக் குழாய் நான்கு (4) பகுப்பாகப் பகுக்கப்பட்டு திரிசூலப் பகுதியோடு சேர்த்து ஐந்து (5) பாகங்களை உடையதாகச் செய்யுங்கள். இந்தக் குழாய்ப் பகுதிக்குள் மந்திரச் சக்கரங்கள் வைத்துத் தரப்படும். மெய்ஞ்ஞானக் கொடிக்குள்ளும்

மந்திரச் சக்கரங்கள் வைத்துத் தரப்படும். எனவே, தாங்கள் அறிவிக்கை எண் 3336இன் படி அனைத்து வகையான பாதிப்புக்களைப் பெற்றவர்களுக்கும் மந்திரித்து அருள் வழங்கலாம். நலம் விளைவிக்கலாம். தங்களைப் போல் பல சித்தரடியார்களையும் உண்டாக்கலாம். புரிந்து செயல்படுக.

யாரும் தங்களுடைய பாதிப்புக்கள், வாழ்க்கைச் சிக்கல்கள், தொழில் நிலைகள் முதலியவைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினால், ... அவர்களுடைய கைரேகை, பிறப்பியல் (சாதகம்), வீட்டுமண், புகைப்படம், ... முதலியவற்றில் ஏதேனும் ஒன்றிரண்டையாவது வாங்கி அதனுடன் அவர்களுக்கு எதைதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற வினாக்களையும் எழுதி அருட்கணிப்புக்காக காணிக்கை அல்லது பூசைச் செலவு ரூபாய் 48 முதல் 108 வரை அவரவர் வசதிப்படி பணம் பெற்று மணியார்டர் மூலமோ, பேங்க் DD மூலமோ அனுப்பி வைக்கலாம். அவைகள் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும். இவைகள்தான் உங்களுக்கு அளிக்கப்படும் செயல்திட்டம்.

விரைந்து செயல்படுக.

புரிந்து செயல்படுக.

**அன்புடன்**

**தலைவர், குருதேவர்,**
**அந்தணர் அண்ணல்,**
**ஞானாச்சாரியார்.**
**சென்னை - 53.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: தட்டச்சு செய்த Cyclostyle நகலாகக் கிடைத்தது.//**

# பண்பாட்டுப் புரட்சி நிறுவனமே நமது நிறுவனம்

... ... ... நமது கழகமும், இயக்கமும் அரசியல் விடுதலை இயக்கத்தை விட மிகப் பெரிய முதன்மையுடைய "சமுதாய விடுதலை நிறுவனம்", "பண்பாட்டு விடுதலை நிறுவனம்", "நாகரிக விடுதலை நிறுவனம்", "கலை விடுதலை நிறுவனம்", "இலக்கிய விடுதலை நிறுவனம்", "கல்வி விடுதலை நிறுவனம்", "மொழி விடுதலை நிறுவனம்", "தனிமனித விடுதலை நிறுவனம்", "மத விடுதலை நிறுவனம்", "தமிழின ஒற்றுமை நிறுவனம்", "இந்துக்களின் ஒற்றுமை நிறுவனம்", "இந்தியாவின் விடுதலை நிறுவனம்", 'இந்தியாவை ஒரே நாடாகக் காப்பாற்றும் விடுதலை நிறுவனம்", "இந்து வேத விடுதலை நிறுவனம்", 'உலக மக்களை அறியாமையில் இருந்து விடுவிக்கும் நிறுவனம்", "உலக மக்களை மத மாயையிலிருந்து விடுவிக்கும் நிறுவனம்", ... அதாவது, எதிரிகளைத் தாக்கும் நிறுவனமல்ல.

நமது நிறுவனம் "**<u>தமிழர்களைத் தமிழர்கள் என்று உணரும்படிச் செய்யப்</u>** <u>பாடுபடும் பண்பாட்டுப் புரட்சி நிறுவனம்</u>". "எதிரிகளை வெல்லுவது நமது நோக்கமல்ல; தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதுதான் நமது நோக்கம்". "மாற்று மதங்களோடு போரிடுவது நமது நோக்கமல்ல; இந்துக்களை, இந்துமதத்தைப் புரிந்து கொள்ளும்படிச் செய்வதுதான் நமது நோக்கம்".

நமது மத மறுமலர்ச்சிக்கும், ஆட்சிமீட்சிக்கும் மாற்று மதங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் வருவது போல் ஏராளமாகப் பணம் வரத் தேவையில்லை. **நமக்குத் தேவையெல்லாம் நமது கொள்கைகளை விளக்கிக் கூறும் பேச்சாற்றலும்; நமது அ.வி.தி.யை, மந்திரிப்பதை,**

**அருள்வாக்குக் கூறுவதை, அருட்கணிப்புச் செய்வதை, பாதிப்புக்களுக்குப் பரிகாரம் செய்வதை, பூசைமொழி வாசகங்களை இனிமையாக உரக்க ஓதுவதை, ... அனைவர் முன்னிலையிலும், அச்ச கூச்ச மாச்சரியமின்றி செய்திடக் கூடிய இளைஞர்கள்தான் தேவை! இளைஞர்கள்தான் தேவை!! இளைஞர்கள்தான் தேவை!!!**

இப்படியாக, நாம் நமது மொழி, இனம், பண்பாடு, நாகரிகம், கலை, கல்வி, ... முதலிய அனைத்தையும் விடுதலை பெறச் செய்ய நமது முன்னோர்களான பதினெண்சித்தர்கள் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் வகுத்துள்ளவற்றை வளமான பைந்தமிழில் ஏட்டில் எழுதவும், நாட்டில் எடுத்துப் பேசவும் முற்படுவதற்கே மிகப் பெரிய ஈரம், வீரம், திறம், உணர்வுத் தரம், ... முதலியவைகள் உடைய விடுதலை இயக்கப் போர்ப்படையை உருவாக்க வேண்டி இருக்கிறது, உருவாக்க வேண்டி இருக்கிறது, உருவாக்க வேண்டி இருக்கிறது.

... ... ...

**//அருட்சேனைத் தளபதிக்கு 7-6-1992இல் குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சல் வடிவக் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பத்தியின் பகுதி.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் (கி.பி.785 – 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

"... தவத்திற்கு ஒருவர் தமிழுக்கு இருவர் என்ற மூதுரையின்படி தமிழன் இலக்கியக் கருத்துக்களை கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் குறைந்தது இரண்டு பேர்களாவது அவசியம் இருந்து ஒருவரோடு ஒருவர் கலந்து பேசி விவாதித்துத்தான் தமிழைப் படிக்க வேண்டும் ...."

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

காணிக்கை: ரூ.10/-